இப்போது இருக்கிறது. ஆசிரியர் நியமனத்திற்கு வேலைவாய்ப் பகங்களிலிருந்து ஆட்களைக் கேட்கும்போது இன்னின்ன வகுப்பி னருக்கு இத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு ஏற்றபடி ஆட்களை அனுப்புங்கள் என்று கேட்டு விகிதாச்சாரப்படி நியமிக்கிறார்கள். அப்படி நியமிக்கும்போது தவறு ஏற்படு மானால் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு உத்தரவு இப்போதே இருக்கிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, 18சதவிகிதம் அரிசனங்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அரசாங்க உத்தரவு இருந்தும் தவறு நடந்ததாக அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். தவறுக்கு ஒரு தண்டனை என்று நான் எதிர் பார்க்கவில்லை. இருந்தாலும் இழந்த இடங்களை இனி வரு கின்ற இடங்களில் நியமனம் செய்து சரி செய்து கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நிச்சயமாக முயற்சி செய்யும்.

திரு. சு. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பள்ளிகளில் ஆசிரியப் பணிகளில் அரிசனர் பகுதி என்று ஒதுக்கப் பட்ட அந்த 18 சதவீதம் பூர்த்தி செய்யாமல் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள தேக்கம்பாடி பள்ளிக்கும், மற்று மொரு பள்ளிக்கும், அரிசனருக்கான அந்த 18 சதவீதம் கொடுக்கப் படாமல் இருக்கிறார்கள். அதனை பூர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசுப் பள்ளிகள் என்று வருகிறபோது தனியாக கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. மொத்தமாகப் பார்த்தால் அந்த 18 சதவீதம் இருக்கும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன். ஆனால் இதுவரை பேசியது தனியார் பள்ளிகள் சம்பந்தப்பட்டது.

Meetings of Governing Body of Regainal Engincering College Trichi

*Q. No. 244—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Education be pleased to state the number of times the Governing body of the Regional Engineering College, Trichi met during each year, 1975-76 and 1977?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : திருச்சிராப்பள்ளி மண்டலப் பொறியியல் கல்லூரியின் ஆட்சி மன்றக் குழு 1975, 1976—ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு தடவை கூடியது. 1977—ல் இரண்டு தடவை கூடியது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, விதிகளின்படி அந்தக் கல்லூரியினுடைய ஆட்சி மன்றக் குழு எத்தனை தரம் கூடியிருக்க வேண்டும். ஆனால் அது கூடியிருக்கிற கணக்கைப் பார்த்தால் அது ஒரு ஆண்டில் ஒரு தடவையும், ஒரு ஆண்டில் இரண்டு தடவைகளும் கூடியிருக்கின்றன. விதிகளின்படி எத்தனை தடவை கூட்டப்பட வேண்டும்? அது எத்தனை தடவை கூடியிருக்கிறது? அப்படி கூடவில்லை என்று சொன்னால், விதிகளின்படி கூடவில்லை என்று சொன்னால் அதற்குக் கொடுக்கப்படுகிற காரணம் என்ன?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடியிருக்க வேண்டும். கூடாதற்கு காரணம், கூட வேண்டிய தேவைகள் இல்லாமல் இருக்கலாம்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லி விட்டார். மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட வேண்டும் என்று. அப்படி ரூல் இருக்கிறது. ஆனால் கூட வில்லை. அந்த ரூலை மீறி மூன்று ஆண்டுகளாக கூடாமல் இருப்பது அந்த கல்லூரி பிரின்ஸ்பாலினுடைய கையில் நிர்வாகம் போயிருப்பதுதான் என்று நான் கூறுகிறேன். அப்படி அந்தக் குழு கூடியிருந்தால், அவருடைய ஊழல் குற்றச்சாட்டுகள் அம்பலத்திற்கு வந்திருக்கும். அப்படி வராமல் செய்வதற்காகத்தான் அந்தக் குழுவை இன்னும் கூட்டாமல் இருக்கின்றார் என்பது உண்மையா? தெரியவில்லை என்று சொன்னால், விசாரணைக் குழு ஏற்படுத்தி விசாரணை நடத்தத் தயாராக இருக்கிறார்களா?

மாண்புமிகுதிரு. செ. அரங்கநாயகம்: The Board shall ordinarily meet once in every three months provided that the Chairman may, whenever he thinks fit, and shall on the written requisition of not less than four members call a special meeting ; not less than 15 days' notice shallbe given for every meeting of the Board and a copy of the proceedings of every meeting shall be furnished to the State Government and Central Government as soon as practicable after the meeting.

இந்தக் குழுவைப் பொறுத்தவரையில் இது இந்தக் கல்லூரி மத்திய அரசு தருகிற 50 சதவீதம் பணத்தையும் மாநில அரசு தருகிற 50 சதவீத பணத்தையும் வைத்து நடத்துகிற ஒன்று ஆகும். இதில் கல்வி அமைச்சராகிய நான் தலைவர் ஆக இருக்கிறேன். அதற்கு பிறகு மாநில அரசின் பிரதிநிதிகள் மூன்று பேர் மத்திய அரசின் பிரதிநிதிகள் 3 பேர் இருக்கிறார்கள். ஆல் இந்தியா கவுன்சில் பார் எஜுகேஷன், அதுவும் ஒரு மத்திய அமைப்பு. அதன் சார்பாக ஒரு ப்ரதிநிதி இருக்கிறார். பூனிவர்

1979 மார்ச் 6]

சிடி வைஸ் சான்சலர்—அவருக்காக ஒரு பிரதிநிதி இருக்கிறார். அதற்குப் பிறகு டெக்னிகல் இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்கிற மத்திய அரசு நியமித்திருக்கிற 2 பேர் இருக்கிறார்கள். ஐ.ஐ.டி. மெட்ராஸ், அதனுடைய பிரதிநிதி ஒருவர் இருக்கிறார். யூ.ஜி.சி. அதுவும் ஒரு மத்திய அமைப்பு, அதனுடைய பிரதிநிதி ஒருவர் இருக்கிறார். ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் இரண்டு பேர் இருக்கிறார்கள். இந்த உறுப்பினர்களில் 4 பேர்களுக்கு குறையாமல் வந்து இருந்தால் இந்தக் கூட்டம் நடைபெற வேண்டும். என்பது ரூல். நாங்கள் அத்தனை பேர்கள் அல்லாமல், ஆசிரியர்களின் பிரதிநிதிகளும் இருக்கக்கூடிய குழு. ஆக நாங்கள் எல்லாம் கூடி கூட முடியாத அளவில் நிலைமை உருவாகிக் கொண்டிருந்தால், கூட்டுவதற்கான வாய்ப்பு நேரிடாமல் இருக்கிறது என்றுதான் அர்த்தம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற குற்றச் சாட்டுக்களுக்கு அடிப்படை இல்லை என்பது மட்டும் அல்ல. அவர்களுடைய உறுப்பினர்கள் இல்லை என்றாலும், பிரதிநிதிகள் இருக்கிறார்கள், அவர்கள் அந்தப் பிரச்னையைப் பற்றி தாராளமாக சொல்லியிருக்கலாம். கூட்டம் இந்த ஆண்டில் கூட நடைபெற்றது. இந்த பிரச்னையை அவர்கள் சொல்லவில்லை. அப்படி அந்தப் பிரச்னை கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டால், விசாரணை செய்ய தயாராக குழு இருக்கிறது.

[முற்பகல் 9·30]

திரு. துரை. முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பேசுகிறபோது மூன்று மாதத்திற்கு ஒரு தடவை இந்தக் குழு கூட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இந்தக் குழு மூன்று வருடங்களாகவே கூடவில்லை என்று குறிப்பிட்டார். அப்படிக் கூடாத அந்தக் குழு தேவைதானா? ஏன் இன்னும் அந்தக் குழுவை கலைக்காமல் வைத்திருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இங்கே குறிப்பிடப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு இந்தக் கேள்வியினைக் கேட்டிருக்கிறார்கள். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட வேண்டும் என்று சொல்லவில்லை. அது சாதாரணமாக "shall ordinarily meet once in every month" என்று தான் அதிலே இருக்கிறது. அதே போல் மூன்று ஆண்டுகளாகக் கூடவே இல்லை என்று நானும் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சொல்லவில்லை அது ஆண்டிற்கு ஒரு முறை கூடியிருக்கிறது. நான் வந்த பிறகு இரண்டு முறை கூடியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.